**அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கடத்தூர்,**

**தர்மபுரி மாவட்டம்- 635 303**

**சுற்றறிக்கை எண் : 1683 /நி2/2023-1 நாள் : 21.09.2023**

**பொருள்:** நிர்வாகம் – அரசு பாலிடெக்னிக் கல்லூரி, கடத்தூர், தருமபுரி மாவட்டம் – சிற்றுண்டிச்சாலை - ஒப்பந்த அடிப்படையில் உணவு வழங்க விண்ணப்பங்கள் வரவேற்பது – தொடர்பாக.

-----------

இக்கல்லூரியில் சிற்றுண்டிச்சாலையை ஒப்பந்த அடிப்படையில் 11 மாத காலத்திற்கு நடத்துவதற்கு இத்துடன் இணைக்கப்ட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சிற்றுண்டிச்சாலையை பள்ளி / கல்லூரி ஏதேனுமொன்றில் நடத்தி முன் அனுபவம் பெற்றவருக்கும், தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண் : 006596/ஜ1/2022, நாள் 07.03.2022-ன் படி SHG Group மற்றும் மூன்றாம் பாலினத்தருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

சிற்றுண்டிச்சாலையில் விற்பனை செய்யப்பட வேண்டிய உணவுப் பொருட்கள் அட்டவணை ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் காணும் பொருட்களின் விலையை குறிப்பிட்டு விலைப்புள்ளியுடன், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு சிற்றுண்டிச்சாலையை நடத்த விரும்புவர்கள் தங்களது விலைப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறையின் மேல் **"சிற்றுண்டிச்சாலை ஒப்பந்தப்புள்ளி"** என்று குறிப்பிட்டு முதல்வர், அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கடத்தூர், தர்மபுரி மாவட்டம் 635 303 என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலாமாக 05.10.2023 அன்று மாலை 3.00 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும். பெறப்படும் விலைப்புள்ளி அனைத்தும் 06.10.2023 மாலை 3.30 மணிக்கு திறக்கப்படும் என்றும், மேற்கண்ட காலக்கெடுவுக்கு பின் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டது என்றும் அறிவிக்கப்படுகிறது.

இணைப்பு

1. விதிமுறைகள்.
2. உணவுப்பொருட்கள் அட்டவணை

முதல்வர் (மு.கூ.பொ)க்காக

பெறுநர்

கல்லூரி இணையதள பொறுப்பாசியர்

(கல்லூரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.)

## நிபந்தனைகள்

1. சிற்றுண்டிச் சாலையில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் தராமானதாகவும் பொருட்களின் விலை, ஒப்பந்த புள்ளியில் குறிப்பிட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.
2. சிற்றுண்டிச் சாலை உள்ளே மற்றும் வெளியே எப்பொழுதும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.
3. அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாதப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் ஒப்பந்த புள்ளி அனுப்பக்கூடாது.
5. சிற்றுண்டிச் சாலை கண்காணிப்பு குழுவினர் அவ்வப்போது சிற்றுண்டிச் சாலையை பார்வையிட்டு அளிக்கும் அறிவுரைகளை தவறாது கடைப்பிடித்தல் வேண்டும்.
6. பயிலக வேலை நேரத்தில் வெளியாட்கள் யாரும் தங்களைப் பார்க்க/ பொருட்கள் வாங்க பயிலக வளாகத்தின் உள்ளே அனுமதிக்கப் படாமட்டார்கள்.
7. தங்களால் மாணவா'களுக்கோ, பணியாளர்களுக்கோ எவ்வித தொந்தரவோ பாதிப்போ இருத்தல் கூடாது. இது போன்ற நிகழ்வுகள் உண்மை என அறியப்படவுடன் தங்களுக்கு சிற்றுண்டிச் சாலை நடத்த வழங்கப்பட்ட அனுமதி இரத்து செய்யப்படும்.
8. பயிலகத்தில் தேர்வு நடைபெறும் நாட்களிலும், அத்தியாவசியமான நிலையிலும், அரசு விடுமுறை நாட்களிலும், சிற்றுண்டிச் சாலை நடத்தப்படுதல் வேண்டும்.
9.. பொதுப்பணித் துறையால் நிர்ணயிக்கப்பட் சிற்றுண்டிச் சாலை வாடகைக் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு ரூ.4,284/- வீதம் அடுத்த வரும் மாதத்தின் 5-ஆம் தேதிக்குள் ரொக்கமாக அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்று கொள்ளுதல் வேண்டும். இந்த வாடகைத் தொகையானது பொதுப்பணித்துறையினால் மாற்றியமைக்கப்படும் பட்சத்தில் அத்தொகையை எவ்வித மறுப்பின்றி செலுத்துதல் வேண்டும்.
10. முன்வைப்புத் தொகையாக ரூ.35,000/- (ரூபாய் முப்பத்தைந்தாயிரம் மட்டும்) ஒப்பந்ததாரர் முதல்வர் அலுவலகத்தில் ரொக்கமாக அல்லது கேட்பு வரைவோலையாக செலுத்தி ரசீது பெற்று கொள்ள வேண்டும். ஒப்பந்த காலம் முடியும் பொழுது தாங்கள் கல்லூரிக்குச் செலுத்த வேண்டிய வாடகை நிலுவை ஏதுமில்லாத பட்சத்தில் இத்தொகை முற்றிலும் தங்களுக்குத் திருப்பி வழங்கப்படும்.
11. துணை மின் பயனீட்டு கருவி (மீட்டர்) மின்கட்டணம் மாதந்தோரும் தங்களது சொந்த செலவில் செலுத்த வேண்டும் வாடகை தொகையில் அடங்காது.
12. ஓராண்டு காலத்திற்கு தங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டால் தொடர்ந்து தங்களுக்கே ஒப்பந்தம் வழங்க எவ்வித உரிமையும் கோர இயலாது.
13. ஒப்பந்தம் குறித்து முதல்வர் அவர்களின் முடிவே இறுதியானது. ஒப்பந்தத்தை நிறுத்தி வைக்கவோ, தள்ளி வைக்கவோ முதல்வருக்கு முழு அதிகாரம் உண்டு.
14. உணவு தரக்கட்டுப்பாட்டு சான்று சமர்பித்த பின்னரே உணவு விடுதி நடத்திட அனுமதி வழங்கப்படும்.

முதல்வர் (மு.கூ.பொ)க்காக.

அட்டவணை

(விலை விவரம் விண்ணப்பதாரால் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்)

| வ. எண் | பொருட்களின்விவரம் | விலை விவரம் ரூ. |
|---|---|---|
| 1. | டீ / காபி / பால் 120 மில்லி | |
| 2. | டீ / காபி / பால் ( Special ) 120 மில்லி | |
| 3. | பார்சல் டீ / காபி / பால் 200 மில்லி | |
| 4. | பருப்பு வடை / உளுந்து வடை ( 30 கி ) | |
| 5. | உருளைக்கிழங்கு போண்டா / பஜ்ஜி / கீரைவடை / தவளைவடை ( 30 கி ) | |
| 6. | சமோசா | |
| 7. | மிக்சர் ( 40 கிராம் ) பொட்டலம் | |
| 8. | இட்லி 1-க்கு ( சாம்பார் மற்றும் சட்னியுடன்) | |
| 9. | தோசை ( சாம்பார் மற்றும் சட்னியுடன்) | |
| 10. | பூரி செட் (கிழங்குடன்) | |
| 11. | புரோட்டா 1-க்கு (குரு மாவுடன்) | |
| 12. | எலுமிச்சை / தயிர் / தக்காளி சாதம் 250 கிராம் அளவுடன் | |
| 13. | பொங்கல் 250 கிராம் அளவுடன் ( சாம்பார் மற்றும் சட்னியுடன்) | |
| 14. | வெஜிடபுள்பிரியாணி 250 கிராம் | |
| 15. | கூல்டிரிங்ஸ் | |
| 16. | பிஸ்கட் | |
| 17. | ஸ்வீட் / கேக் வகைகள் | |

சிற்றுண்டி சாலை நடத்துபவரின்
தேதியுடனான கையொப்பம்